# செப்டம்பர் – 09 – பொதுக்கால 23ம் ஞாயிறு

### “அவரை நோக்கி ‘எப்பத்தா’ அதாவது திறக்கப்படு என்றார்” மாற்:7:34

## முதல் வாசகம் ஏசாயா 35 : 4 – 7

உள்ளத்தில் உறுதியற்றவர்களை நோக்கி, ”திடன்கொள்ளுங்கள், அஞ்சாதிருங்கள் இதோ, உங்கள் கடவுள் பழிதீர்க்கவருவார் அநீதிக்குப் பழிவாங்கும் கடவுளாக வந்து உங்களை விடுவிப்பார்“. அப்போது பார்வையற்றோரின் கண்கள் பார்க்கும். காது கேளாதோரின் செவிகள் கேட்கும். அப்பொழுது, காலூனமுற்றோர் மான்போல் துள்ளிக்குதிப்பர் வாய்பேசாதோர் மகிழ்ந்து பாடுவர் பாலைநிலத்தில் நீரூயஅிற்றுகள் பீறிட்டு எழும் வறண்டநிலத்தில் நீரோடைகள் பாய்ந்தோடும். கனல்கக்கும் மணல்பரப்பு நீர்த் தடாகம் ஆகும் தாகமுற்ற தரை நீரூற்றுகளால் நிறைந்திருக்கும் குள்ளநரி தங்கும் வளைகள் எங்கும் கோரையும் நாணலும் முளைத்து நிற்கும்.

**பதில்பாடல் :** என் நெஞ்சமே நீ ஆண்டவரைப் போற்று.

## இரண்டாம் வாசகம் : யாக்கோபு 2 : 1 – 5

என் சகோதர சகோதரிகளே, மாட்சிமிக்க நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவினிடம் நம்பிக்கை கொண்டுள்ள நீங்கள் ஆள்பார்த்துச் செயல்படாதீர்கள். பொன் மோதிரமும் பளபளப்பான ஆடையும் அணிந்த ஒருவரும் அழுக்குக் கந்தையணிந்த ஏழை ஒருவரும் உங்கள் தொழுகைக்கூடத்தினுள் வருகிறார்கள் என வைத்துக்கொள்வோம். அப்பொழுது நீங்கள் பளபளப்பான ஆடை அணிந்தவர்மீது தனிக்கவனம் செலுத்தி அவரைப் பார்த்து, ”தயவுசெய்து இங்கே அமருங்கள்” என்று சொல்கிறீர்கள். ஏழையிடமோ, ”அங்கே போய்நில்” என்றோ அல்லது ”என் கால்பக்கம் தரையில் உட்கார்” என்றோ சொல்கிறீர்கள். இவ்வாறு உங்களுக்குள்ளே வேறுபாடுகாட்டி, தீய எண்ணத்தோடு மதிப்பிடுகிறீர்கள் அல்லவா? என் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, நான் சொல்வதைக் கேளுங்கள் உலகின் பார்வையில் ஏழைகளாய் இருப்பவர்களை, நம்பிக்கையில் செல்வர்களாகவும் தம்மீது அன்பு செலுத்துபவருக்கு வாக்களிக்கப்பட்ட அரசை உரிமைப்பேறாகப் பெறுபவர்களாகவும் கடவுள் தேர்ந்து கொள்ளவில்லையா?

## நற்செய்தி : மாற்கு 7:1– 8,14 –15, 21– 23

அக்காலத்தில் பரிசேயரும் எருசலேமிலிருந்து வந்திருந்த மறைநூல் அறிஞர் சிலரும் இயேசுவிடம் வந்துகூடினர். அவருடைய சீடருள் சிலர் தீட்டான, அதாவது, கழுவாத கைகளால் உண்பதை அவர்கள் கண்டார்கள். பரிசேயரும், ஏன் யூதர் அனைவருமே, தம் மூதாதையர் மரபைப் பின்பற்றிக் கைகளை முறைப்படி கழுவாமல் உண்பதில்லை. சந்தையிலிருந்து வாங்கியவற்றைக் கழுவிய பின்னரே உண்பர். அவ்வாறே கிண்ணங்கள், பரணிகள், செம்புகள் ஆகியவற்றைக் கழுவுதல் போன்று அவர்கள் கடைப்பிடிக்கவேண்டிய மரபுகள் இன்னும் பல இருந்தன. ஆகவே பரிசேயரும் மறைநூல் அறிஞரும் அவரை நோக்கி, ”உம்சீடர் மூதாதையர் மரபுப்படி நடவாமல் தீட்டான கைகளால் உணவு அருந்துவதேன்?” என்றுகேட்டனர். அதற்கு அவர், ”வெளிவேடக்காரர்களாகிய உங்களைப்பற்றி எசாயா பொருத்தமாக இறைவாக்கு உரைத்திருக்கிறார். ”இம்மக்கள் உதட்டினால் என்னைப் போற்றுகின்றனர் இவர்கள் உள்ளமோ என்னைவிட்டு வெகுதொலையில் இருக்கிறது. மனிதக் கட்டளைகளைக் கோட்பாடுகளாகக் கற்பிக்கின்றனர். இவர்கள் என்னை வழிபடுவது வீண்” என்று அவர் எழுதியுள்ளார். நீங்கள் கடவுளின் கட்டளைகளைக் கைவிட்டு மனித மரபைப் பின்பற்றி வருகிறவர்கள்” என்று அவர்களிடம் கூறினார். இயேசு மக்கள் கூட்டத்தை மீண்டும் தம்மிடம் வரவழைத்து, அவர்களை நோக்கி, ”நான் சொல்வதை அனைவரும் கேட்டுப் புரிந்துகொள்ளுங்கள். வெளியேயிருந்து மனிதருக்குள்ளே சென்று அவர்களைத் தீட்டுப்படுத்தக்கூடியது ஒன்றுமில்லை. மனிதருக்கு உள்ளேயிருந்து வெளியே வருபவையே அவர்களைத் தீட்டுப்படுத்தும். ஏனெனில் மனித உள்ளத்திலிருந்தே பரத்தைமை, களவு, கொலை, விபசாரம், பேராசை, தீச்செயல், வஞ்சகம், காமவெறி, பொறாமை, பழிப்புரை, செருக்கு, மதிகேடு ஆகியவற்றைச் செய்யத் தூண்டும் தீய எண்ணங்கள் வெளிவருகின்றன. தீயனவாகிய இவை அனைத்தும் உள்ளத்திலிருந்து வந்து மனிதரைத் தீட்டுப் படுத்துகின்றன” என்றார்.

**தியானம்:** அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது, அதனினும் அரிது கூன் குருடு செவிடு பேடு நீங்கிப் பிறத்தல் அரிது என்று தமிழ் மூதாட்டி ஔவையார் கூறுவார். மானிடப் பிறப்பில் உடலில் குறைபாடுகள் இன்றி பிறத்தலே சிறந்த பிறப்பு. ஏனெனில் குறைபாடுகளோடு பிறப்பவர்கள் இந்த சமூகத்தின் ஏளனத்திற்கும் நகைப்புக்கும் விமர்சனங்களுக்கும் ஆளாவதைப் பார்க்கின்றோம். இப்படிப்பட்ட மனிதர்கள் தங்களின் உடலில் அனுபவிக்கும் வேதனையைவிட மனிதர்களின் ஏளனப்பார்வையும், கேலிப்பேச்சுக்களும் அவர்களுடைய ஆளுமையை வெகுவாகப் பாதித்துவிடுகின்றது. எனவே இவர்கள் நம்பிக்கை இழந்தவர்களாய் தங்களையே தாழ்வாக எண்ணி மனம் கசந்து வாழுகின்ற நிலையை நாம் காணுகின்றோம். இன்றைய நற்செய்தி வாசகத்தில் காது கேளாதவரும், திக்கிப் பேசுபவருமான ஒரு மாற்றுத்திறனாளியைத்தான் இன்று இயேசுவுக்கு முன்னால் கொண்டுவருகின்றனர். உடல் குறைபாட்டினால், மனிதர்களின் புறக்கணிப்பால் பாலைவனமாகிப்போயிருந்த அவருடைய வாழ்வை அறிந்த இயேசு அவரை முதலில் அந்த சூழ்நிலையிலிருந்து வெளியே கொண்டுவருகின்றார். பின்னர் அவருடைய உடனிருப்பை அவருக்கு தனது தொடுதலால் வெளிப்படுத்துகின்றார். உடலில் அனுபவித்த வேதனையை விட அவர் உள்ளத்தில் அனுபவித்த வேதனை, தனிமை, தாழ்மையான உணர்வு, யாருமற்ற கைவிடப்பட்டநிலை போன்றவற்றால் இறுகிய அவருடைய வாழ்வை, தன்னுடைய உமிழ்நீரை பயன்படுத்தி அதாவது தொடக்கநூலில் ஆண்டவர் மனிதனை உருவாக்கும் போது இறுகிய மண்ணை தண்ணீரினால் குழைத்து மனித உருவத்தை உருவாக்கியதைப்போல அவருடைய உமிழ்நீரைப் பயன்படுத்தி புதிய மனிதனாக அவரை உருவாக்குகின்றார். கடவுளின் அன்பை, உடனிருப்பை அறிந்த அந்த மனிதனின் கட்டுக்கள் உடைக்கப்படுகின்றன, காதுகள் கேட்கின்றன. அவன் கடவுளை புகழ்ந்து பிறருக்கு சாட்சியாக மாறுகின்றான். நம்மில் இருக்கும் ஊனம் (வெளிப்படையான மற்றும் உள்ளார்ந்த), காயங்கள் நம்மை கடவுளைக் காண முடியாமல் அவருடைய வார்த்தையை கேட்க முடியாமல், குணத்தை அனுபவிக்க முடியாமல் செய்துவிடுகின்றது. சாத்தான் நம்முடைய வாழ்க்கையில் ஏற்படுத்தியிருக்கும் இழப்புக்களை துன்பங்களை இயலாமைகளைப்பற்றி பேசுகிறோமே தவிர நம்மோடு வாழும் இறைவனுடைய ஆற்றலை நாம் உணர்வதில்லை. அவருடைய குரலைக் கேட்பதுமில்லை, அதனை அறிக்கையிடுவதுமில்லை எனவேதான் நாம் வாசிக்கின்றோம், “இம்மக்களின் நெஞ்சம் கொழுத்துப்போய் விட்டது காதும் மந்தமாகிவிட்டது. இவர்கள் தம் கண்களை மூடிக்கொண்டார்கள். எனவே கண்ணால் காணாமலும் காதால் கேளாமலும் உள்ளத்தால் உணராமலும் மனம் மாறாமலும் இருக்கிறார்கள் நானும் அவர்களை குணமாக்காமல் இருக்கிறேன்’’ (மத் 13:15). இதற்குமாறாக நாம் எப்போது இறைவனுடைய உடனிருப்பை உணர்கின்றோமோ, அவருடைய வார்த்தைகளை கண்களால் பார்த்து வாசித்து, காதுகளால் கேட்டு, அவருடைய வாக்குத்தத்தங்களை நாவால் அறிக்கையிடுகின்றோமோ, அப்பொழுதே நம் ஆசீர்வாதங்களை மூடியிருக்கும் அனைத்துக் கதவுகளுக்கும் நமக்காகத் திறக்கப்படும்.